DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | சீனிவாசன் | Village | கலந்திரா, செட்டியப்பனூர் |
| Father's Name | மேகநாதன் | Taluk | வாணியம்பாடி |
| Age | | Calling | கிராம நிர்வாக அலுவலர் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **11.02.2026**

**O.S. No. 79/2017** **பி.வா.சா.1** **11.50 PM – 12.35 PM**

**முதல் விசாரணை –**

1. நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். சாட்சி சம்மனில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை நான் எடுத்துவந்துள்ளேன். UDR முன்பு ஆவணங்களான அ பதிவேடு மற்றும் புலவரைப்படம் எடுத்துவந்துள்ளேன். கலந்திரா மதுரா செட்டியப்பனூர் கிராமத்தில் சர்வே எண்கள்.161 மற்றும் 162/2 கான ஆவணங்களை எடுத்துவந்துள்ளேன். UDR முன்பு சர்வே எண்.161 க்கான அ–பதிவேடு இதயதுல்லா வகையறா 4 நபர்கள் பெயரில் 14 சென்ட் பரப்பளவில் உள்ளது. UDR முன்பு சர்வே எண். 162 ஆனது 4 ஏக்கர் 20 சென்ட் பரப்பளவில் தோட்டி பெயரில் உள்ளது. **(மேற்படி சர்வே எண்கள்.161 மற்றும் 162 கான UDR முன்பு அ–பதிவேடு உண்மை நகல் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (மேற்படி சர்வே எண்.161 UDR முன்பு புல வரைப்படம் உண்மை நகல் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (மேற்படி சர்வே எண்.162 UDR முன்பு புல வரைப்படம் உண்மை நகல் நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. யு.டி.ஆர்க்கு பின்பு மேற்படி சர்வே எண் 161 ஆனது நத்தம் ஆக மாறிவிட்டது. சர்வே எண். 161 ஆனது 1985 யு.டி.ஆர் சமயம் அ பதிவேட்டில் ஆனந்தன் முனிரத்தினம், வடிவேலு மற்றும் ராமன் ஆகியோர் பெயரில் உள்ளது, அதன் பரப்பளவு 5.5 ஏர்ஸ் ஆகும். சர்வே எண். 162 ஆனது 1985 யு.டி.ஆர் சமயம் அ பதிவேட்டில் 162/1A2 22 ஏர்ஸ் 162/1B ஆனது 21 ½ ஏர்ஸ், 162/1C ஆனது 6 ஏர்ஸ், 162/1D ஆனது 14 ஏர்ஸ் ஆகிய உட்பிரிவுகள் பட்டா எண்.589–ல் ஆனந்தன் மற்றும் 3 பெயரில் உள்ளது. சர்வே எண்.162/2 ஆனது 84 ஏர்ஸ் பட்டா எண்.622–ல் ஆனந்தன், முனிரத்தினம், வடிவேலு, ராமன், வசந்தா, விஸ்வநாதன் ஆகியோர் பெயரில் உள்ளது. **(மேற்படி 1985 யு.டி.ஆர் சமயம் அ பதிவேடு உண்மை நகல் நீ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. மேற்படி சர்வே எண். 161 ஆனது கடந்த 2000ம் வருடத்தில் நத்தம் நிலவரி திட்டம் மூலமாக சர்வே எண்.161/1 ஆனது 281 ச.மீ ஆக வடிவேல் மற்றும் ராமன் ஆகியோர் பெயரிலும், சர்வே எண்.161/2 ஆனது 84 ச.மீ முனிரத்தினம் மற்றும் ஆனந்தன் பெயரிலும், சர்வே எண்.161/3 ஆனது 13 ச.மீ மாசிலாமணி பெயரிலும், சர்வே எண்.161/4 ஆனது 42 ச.மீ தசரதன் பெயரிலும், சர்வே எண்.161/5 ஆனது 74 ச.மீ கஸ்துரியம்மாள் பெயரிலும், சர்வே எண்.161/6 ஆனது 56 ச.மீ வேலு கவுண்டர் பெயரிலும் உட்பிரிவு செய்யப்பட்டு மனை பிரிவுகளாக உள்ளது. (**மேற்படி சர்வே எண். 161–க்கான நத்தம் நிலவரி திட்டம் தூய அடங்கல் பதிவேடு உண்மை நகல் நீ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

4. கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வாணியம்பாடி, சார்பு நீதிமன்றத்தில் இருந்து இந்த வழக்கு சம்மந்தப்பட்ட சொத்துக்களுக்கு வருவாய் துறை ஆவணங்கள் ஏதேனும் பெயர் மாற்றம் செய்யக்கூடாது என உத்தரவாணை ஏதேனும் கிடைக்கப்பெற்றதா என்று எனக்கு தெரியாது.

**<u>குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)–</u>**

1. எனக்கு நீதிமன்றத்தில வந்த அழைப்பாணையில் எங்காவது வழக்கு சொத்து என வார்த்தை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. யு.டி.ஆர்–க்கு முன்பு உள்ள ஆவணங்களை எடுத்து வந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால சரிதான். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களுக்கான தற்போதைய வீட்டு பட்டா யார் பெயரில் உள்ளது என சொல்லமுடியாது என்றுசொன்னால் இன்றைய தேதியில் யார் பெயரில் உள்ளது என இணையதளத்தில் பார்த்தால் தான் தெரியும். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்கள் இரண்டும் யு.டி.ஆர். க்கு முன்பு இருந்த சர்வே எண்கள் என்றால் சரிதான்.

2. அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்கள் 161 மற்றும் 162/2 க்கான 1992 வருடத்தில் நடந்த நத்தம் Resurvey உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் 161 மட்டும் தான் நத்தம் நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சர்வே எண்.162/2 ஆனது தற்போது எந்த வகைப்பாடு நிலமாக உள்ளது என்றால் உட்பிரிவு 162/2A ஆனது 68.08 ஏர்ஸ் பரப்பளவில் புஞ்சை நிலமாக உள்ளது சர்வே எண்.162/2–ல் மற்ற 9 உட்பிரிவுகள் நத்தமாக உள்ளது. **(மேற்படி சர்வே எண்.162–க்கான கலந்திர மதுரா அ பதிவேடு உண்மை நகல் நீ.ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. சர்வே எண்.161 மற்றும் 162/2ல் ராமன் மற்றும் வடிவேலு பெயரில் கூட்டுப்பட்டாவாக ஏதாவது வருகிறதா என்றால் சர்வே எண்.161/1 மட்டும் தான் கூட்டுபட்டா வருகிறது. சர்வே எண்.162–ல் ராமன் பெயரில் எதாவது நிலம் உள்ளதா என்றால் 162/2E, 162/2H கூட்டு பட்டா வருகிறது.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.